## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 120/2023

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 14.10.2025 | | |
| பெயர்: | ஸ்ரீகாந்த்<br>(PW– 1 Cross ) | தகப்பனார் பெயர்: | ராஜேந்திரன் |
| கிராமம்: | வேட்டங்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | கட்டுமானப்பணி | வயது : | 33/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 14.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.01)**

**1.** என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் எனது வீட்டிற்கு தொந்தரவு கொடுத்தார்கள், அதை தடுக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்பது 95 ச.மீ ஆகும். வழக்கு சொத்தில் ஒரு பகுதியை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து அவர்கள் வசம் உள்ளது என்றால் சரியல்ல. நான் சொத்து விபரத்தில் கூறியுள்ள நான்கெல்லையில் ரோடானது வடக்கில் உள்ளதா? தெற்கில் உள்ளதா? என்றால் தெற்கில் உள்ளது.

2. தாவா சொத்தில் மாடி வீடும் அந்த வீட்டிற்கு பின்பு கூரை வீடும் உள்ளதா என்றால் உள்ளது. அந்த மாடி வீடும் கூரை வீடும் தான் பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டியுள்ளனர் என்று பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எத்தனை வீடு உள்ளது என்றால் எதிரில் காலனி வீடு, பின்புறம் கூரை வீடு உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்குப் பக்கத்தில் பிரதிவாதிகளுக்கு சொந்தமான கைப்பம்பு உள்ளது என்றால் இல்லை, அது எனக்கு சொந்தமானது.

3. தாவா சொத்து முழுமையாக எனது அனுபவத்தில்தான் உள்ளது என்பதற்காக VAO அல்லது தாசில்தாரிடம் ஏதேனும் சான்றிதழ் வாங்கி தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சொத்து விபரத்தில் வடக்கில் ரோடு உள்ளது என்றால் சரியல்ல. ரோட்டிற்கும் வடக்கில் தாவா சொத்து உள்ளது என்றும், அனுபவம் என்னிடம் உள்ளது என்றும் வேறு யாரிடமாவது சான்றிதழ் பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. தாவா சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமித்தது சம்மந்தமாக மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டு அதன் விசாரணைக்கு எனக்கு சம்மன் வந்ததா என்றால் வந்தது. அந்த ஆவணம் வா.சா.ஆ.4. அதனால் எனது புகார் மூலமாக பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து அனுபவத்தில் உள்ளனர் என நான் ஒத்துக்கொள்கிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும் பிரதிவாதிகள் வீட்டிற்கும் வடக்கு தெற்காக சந்து உள்ளது என்றால் சரியல்ல. அந்த சந்து எனக்கு சொந்தமானது. அந்த சந்தில் இருவருக்கும் பொதுப் புழக்கம் உள்ளது என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 13.18)**